(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 46.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2024 ஆகஸ்ட் 21, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1879/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மாத்தளை மாவட்டத்தில் பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக மாத்தளை மாவட்டத்திலுள்ள சுகாதார நிலையங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலையங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1920/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி திட்டங்களில் அங்கத்துவம் பெறுவதற்கு தகைமை பெறும் தொழில்கள் யாவை;

(iii) வருடாந்தம் மேற்படி திட்டங்களில் அங்கத்துவம் பெறும் எண்ணிக்கை எத்தனை;

(iv) மேற்படி அங்கத்தவர்களுக்கு வருடாந்தம் கிடைக்கப்பெறும் நன்மை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி திட்டங்களுக்கென புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1945/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள கரும்பு இனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி இனங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் பயிரிடப்படுகின்ற கரும்பு இனங்கள் யாவை என்பதையும்;

(iv) மொலாசஸ் அதிகமாக உற்பத்தி செய்யும் கரும்பு இனங்கள் யாதென்பதையும்;

(v) மொலாசஸ் குறைவாக உற்பத்தி செய்யும் கரும்பு இனங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1972/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் புகையிரத வீதிகளின் முழு நீளம் கிலோ மீற்றரில் எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரத எஞ்சின்களினதும் பெட்டிகளினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த காலங்களில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகளும் எஞ்சின்களும் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1995/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடும் வரட்சி காரணமாக ஹம்பாந்தோட்டை, உடவலவ வலயம், கிரம ஓய வலயம் மற்றும் மலலஆர வலயம் உட்பட தென் கிழக்கு சமவெளி வலயங்கள் பலவற்றில் விளைநிலங்கள் அழிவடைந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக 'சுரகிமு ருஹுண' அமைப்பினால் முன்மொழியப்பட்டுள்ள, பழைய நீர்ப்பாசன பாதுகாப்பு கட்டமைப்பினை முறைப்படுத்தல் மற்றும் ஈர வலயத்தின் மேலதிக நீரை மேற்குறிப்பிட்ட வலயங்களுக்கு அனுப்புதல் (களு கங்கையை திசைதிருப்பும் கருத்திட்டம்) என்ற இரண்டு தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்குறிப்பிட்ட வலயங்களில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையை போக்குவதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ள கிங் கங்கை, நில்வளா கங்கை கருத்திட்டங்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2011/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் தூய குடிநீர் வசதிகளில்லாத கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவின் பெயர் மற்றும் தூய குடிநீர் வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iii) கண்டி மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2026/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மொத்த வயல் நிலங்களின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலங்களில் வருடத்தில் ஒரு போகம் மாத்திரம் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலங்களின் அளவு, இரு போகங்கள் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலங்களின் அளவு மற்றும் மூன்று போகங்கள் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலங்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலங்களில் நெல் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2044/2024

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஓய்வூதியம் பெறுகின்ற சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள, அரச கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிப் பெயரின் அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாதுகாப்புக்காக முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

2058/2024

கௌரவ வேலு குமார்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தாய்மார் தொழிலுக்குச் செல்கின்ற சந்தர்ப்பங்களின்போது, அவர்களது குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான குழந்தைக் காப்பகங்கள் (crèche) தோட்டங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களுக்கு அனுமதிக்கும் குழந்தைகளின் வயதெல்லை யாது என்பதையும்;

(iii) இன்றளவில், மேற்படி நிலையங்களில் பராமரிக்கப்படுகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிலையங்களுக்குப் பொறுப்பான நிருவாகி கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்குறித்த நிலையங்களை பேணிச்செல்வதில் பின்பற்றப்பட வேண்டிய தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இல்லையெனில், அவற்றை வகுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2139/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை, ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கமத்தொழில் பற்றிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு இதுவரை சுமார் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி பாடநெறியை பயிலும் மாணவர்களின் செயன்முறைசார் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான அம்சங்களாக அமையும் பயிர்செய்கை பண்ணை, கால்நடைப் பண்ணை, வயல் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) விவசாயப் பிரிவுத் தலைவர்களினால் மேற்படி பாடநெறி முறையாக கண்காணிப்புச் செய்யப்படாமை காரணமாக கமத்தொழில் பாடநெறிக்குத் தேவையான அத்தியாவசிய அம்சமொன்றான கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்படுவதில்லை என்பதையும்;

(iii) விவசாயப் பாடநெறியை கற்பதற்கு உயர் கேள்வி காணப்படுகின்ற போதிலும் அதற்குத் தேவையான போதனாசிரியர்களின் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்காக வெளி போதனாசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி சிக்கல்களுக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— பகிரங்க சொத்துக்கள் முகாமை,— நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களம் எனவழைக்கப்பட வேண்டியதும் அறியப்படவேண்டியதுமான திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கென ஏற்பாடு செய்வதற்கும்; பகிரங்க நிறுவனமொன்றினால் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்படும், குறித்தளிக்கப்படும், உடைமையில் வைத்திருக்கப்படும், அதற்கு உரித்தாக்கப்படும், வைத்திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் நிதிசாரா அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அடையாளம் காணுவதற்கும் அவற்றிற்கான தேசிய சொத்து இடாப்பொன்றைத் தொகுப்பதற்கும்; அத்தகைய இடாப்பை காலத்துக்குக்காலம் நாளதுவரையாக்குவதற்கும் அத்தகைய சொத்துக்களின் முறையான விபரத்திரட்டுக்களை பகிரங்க நிறுவனங்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்),— (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

4.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— வாடகை (நீக்கல்),— 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

5.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல்,— வளவொன்றில் இருப்பாட்சியிலிருந்து ஆட்களை வெளியேற்றுவதிலிருந்து நிலக்கிழார் ஒருவரைத் தடுப்பதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

6.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தம்),— (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

7.

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"(140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

8.

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

9.

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை விழிப்பார்வைத் தேர்வாய்வாளர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

10.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 செப்தெம்பர் 03 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 28 மற்றும் 45 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடனும் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபையின் ஒருமைப்பாட்டுடனும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூன் 06 ஆம் திகதிய 2387/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.
வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.
விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.
நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.
பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.
பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.
வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.
குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.
குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.
மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.
முற்பாதுகாப்பு வழிமுறைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.
மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்,— 2022 மார்ச் மாதத்தில், அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியை கண்டிருந்தமையால், இலங்கை கடுமையான நிலையான படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தமையாலும் இதன் விளைவாக, இலங்கை நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில், பொருளாதார நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியிருந்தமையினாலும்;

இந்த கடுமையான பிரச்சினை பற்றி பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) கடனை மறுசீரமைப்பதற்கும், நெருக்கடிக்கு தீர்வைவொன்றைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தமையினால் அக்கறை தாரர்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிதி ஆலோசகர் லஸார்ட் (Lazard) மற்றும் சட்ட ஆலோசகர் க்ளிஃபர்ட் சான்ஸ் எல்எல்பீ (Clifford Chance LLP) ஆகியோர்களை நியமித்திருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியமானது (IMF), இலங்கையின் நிதியியல் நிலைமை பற்றிய விரிவான மீளாய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரையறுத்து நிலையான படுகடன் பற்றிய மதிப்பீடொன்றை வெளியிட்டிருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கமைவாக, கடுமையான கடன் மறுசீரமைப்பு நடைமுறை பின்னர் இலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினாலும்;

இருதரப்பு கடன்வழங்குநர் மீள்கொடுப்பனவுகளையும், இறையாண்மை பிணை உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் படுகடன் திருப்பிச் செலுத்தல்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், பலதரப்பு படுகடன் கொடுப்பனவு களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தமையினாலும்;

2023 யூன் 28 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, பொதுப்படுகடனைச் செலுத்துவதில் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு படுகடன் உகந்தநிலைக்கு ஆக்கப்படுதல் வேண்டும் என்று பாராளுமன்றம் தீர்மானித்திருந்தமையினாலும்;

உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது, சர்வதேச நாணய நிதியத்தின், நிலையான படுகடனைச் செலுத்துகின்ற மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையால் நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையினால், இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களின் எஞ்சிய இரண்டு பிரிவுகள் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் இறையாண்மை பிணை உரிமையாளர் களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையான படுகடன் அளபுருக்களுக்கேற்ப இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதற்காக, பிரான்ஸ், யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்று (OCC) அமைக்கப்பட்டிருந்தமையினாலும், அதேவேளை, இலங்கையானது சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவாக அதே அளபுருக்களுக்குள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமையினாலும்;

எதிர்காலத்தில் சாத்தியமான நேர்மறையான கடன் மீளாய்வுகளுக்கு வழிவகுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழு (OCC) மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றிகரமான முடிவை கோடிட்டுக் காட்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2024 யூன் 26 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தமையினாலும்;

சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகுகையை இலகுபடுத்தவுள்ள இந்த மூலோபாய மற்றும் அளபுரு அணுகுமுறையின் விளைவாக செம்மைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்களை அடைவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றமையினாலும்;

அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறித்துகாட்டி, இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC), 2024 யூன் 26 ஆம் திகதி பரிஸில் படுகடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்ததுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவை பெய்ஜிங்கில் கடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்தன. இந்த உடன்படிக்கைகள், இலங்கையானது, கடன் வழங்கும் நாடுகளுடன் புதிய ஈடுபாட்டுடன் அதன் இருதரப்பு பொருளாதார உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கின்றமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையாக படுடைனைச் செலுத்துதல் பற்றிய பகுப்பாய்வுடன் ஒத்துப்போகும் வகையில் படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள், படுகடனை நிலையாகச் செலுத்துவதனை மீள அடைவதற்கு கருவியாக அமைந்துள்ளன. மேலும், அவை விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவி, நிலையான வளர்ச்சியைப் பேணி இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு மாற்றியமைப்பதற்கும் தயாராகவுள்ளமையினாலும்;

2024 யூன் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வரும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் படுகடன் மறுசீரமைப்புத் தொடர்பில், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட இறுதி உடன்படிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் (EXIM Bank) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கான இறுதித் திருத்த உடன்படிக்கை.

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு இன்டர்நெசனல் கென்ரேனர் டேர்மினல் லிமிட்டெட் தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 மே 03 ஆம் திகதிய 2382/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூன் 28 ஆம் திகதிய 2390/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 யூன் 18 ஆம் திகதிய 2389/08 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*25.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரை களுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 28 ஆம் திகதிய 2364/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 15 ஆம் திகதிய 2393/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

28.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

வன்னி மண் அறக்கட்டளை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

2152/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சுரங்க மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தினையும் புலமைச்சொத்துச் சட்டத்தினையும், ஆசா மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடட்டின் உரிமத்திற்கு முன்பே தேவைப் படுத்தப்பட்ட உரிமத்தினை நீண்ட காலம் கொண்டிருந்த புத்தளம் இல்மனைட் லிமிடட்டின் (பிஐஎல்) அடிப்படை உரிமைகளையும் மீறி, ஆய்வுக்காகவும் விருத்திக்காகவும் ஆசா மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடட்டுடன் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் (எஸ்எல்சிசி) ஒப்பந்தம் செய்துகொண்டமைக்கான காரணங்களையும் முறைகளையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கைத்தொழில் அமைச்சின் 2023.05.23 திகதிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்களையும்;

(ii) 2023.10.19 அன்று நிதி அமைச்சுக்கு புத்தளம் இல்மனைட் லிமிடட்டினால் அனுப்பிவைக்கப்பட்ட மேன்முறையீட்டின் பெறுபேற்றையும்;

(iii) முறையே 2024.01.30 அன்றும் 2024.03.11 அன்றும் நிதி அமைச்சினால் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமைக்கான காரணங்களையும்;

(iv) நிரல் அமைச்சினாலும் ஏக பங்குடைமையாளரான திறைசேரியினாலும் இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மீது இயைபுறல் அமுலாக்கப்படும் முறையினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?